**DEPOSITION OF WITNESS (Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE (PCR), THANJAVUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | **Case No. C.C.1/2019** |
| Sessions | : | **Prosecution. PW.8** |
| Deposition of Witness Name | : | **நடராஜன்** |
| Father's Name | : | **த/பெ. நாகராஜன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed by Tmt. R. Pramila, Translator of this Court in accordance with the provisions of Oaths Act of the day of **27.09.2019**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் டவுன் உட்கோட்ட காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.1.2018 ம் தேதி நான் திருவாரூர் உட்கோட்ட காவல் கண்காணிப்பாளராக பணியிலிருந்த போது கூத்தாநல்லூர் காவல் நிலைய குற்ற எண் 8/2018 சபி 147, 148, 294(பி), 324, 506(2) இதச பிரிவுகளின் கீழ் உதவி ஆய்வாளர் வெங்கடாச்சலம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஆய்வாளர் பார்வைக்கு வைக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையினை காவல் ஆய்வாளர் ராதாகிருஷ்னன் பார்வையிட்டு இவ்வழக்கின் சம்பவ இடத்திற்கு 11.1.2018ம் தேதி காலை 6 மணிக்கு சென்று சாட்கிள் முகமது ஜாகிர் உசேன், மற்றும் ஷேக் அலாவுதின் ஆகியோர் முன்னிலையில் ஒரு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயர் செய்து சாட்சிகளின் கையெழுத்து பெற்றுள்ளார். அந்த பார்வை மகசர் அசர்ஆ 4 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 5. பின்பு இவ்வழக்கின் புகார் தாரர் முகமது தௌபிக் சாட்சிகள் அப்துல் ரஜாக், ரியாசுதின், ராமு, முகமது ஜாகிர் உசேன்,ஷேக் அலாவுதின், ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கின் எதிரி பாண்டியராஜனை பொதக்குடி லெட்சுமாங்குடி வெண்ணாத்து பாலம் அருகில் வைத்து கைது செயது நீதி மன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். பின்பு இவ்வழக்கானது எதிரிடை வழக்காக இருப்பதால் இவ்வழக்கினை விசாரணை செய்யும் அதிகாரம் காவல் துணை கண்காணிப்பாளருக்கு மட்டுமே உள்ளதால் இவ்வழக்கு கோப்பினை காவல் துணை கண்காண்ப்பாளராக பணியிலிருந்த சுகுமார் என்பவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு குற்ற எண் 9/2018 உடன் சேர்த்து இதனையும் புலன் விசாரணை செய்துள்ளார். அவர் ஏற்கெனவே விசாரிக்கப்பட்ட சாட்சிகள் சொன்ன அதே விபரத்தை தன்னிடமும் விசாரணையின் போது சொன்னதால் தனியாக மறுவாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. அவர் மேற்படி சட்டபிரிவுகளை 294(பி), 324, 506(2) ஆக சட்டபிரிவு மாற்று அறிக்கை மாற்று அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த சட்டபிரிவு மாற்று அறிக்கை அசாஆ 6 ஆக குறியிடப்படுகிறது. பின்பு அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் அதற்கு பின் காவல் துணை கண்காணிபாளர் பணியில் சேர்ந்த என்னிடம் ஒப்புவிக்கப்பட்ட வழக்கு கோப்பினை நான் பெற்று சாட்சிகளை விசாரித்தேன். பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கபில் ராஜ் என்பவரை விசாரித்து அவரிடமிருந்து விபத்து பதிவேடு மற்றும் காயசான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு மற்றும் காயசான்று அசாஆ 7 ஆக குறியிடப்படுகிறது. பின்பு வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் வெங்கடாசலம் முதல் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ராதாகிருஷ்னன்

ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்பு மேற்படி சட்டபிரிவு மாற்று அறிக்கை பிரிவுகளின் கீழ் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். பின்பு வழக்கின் எதிரி பாண்டியராஜன் மட்டும் சம்மந்தப்பட்டுள்ளது தெரியவந்ததாலும புகாரில் கண்ட மற்ற எதிரிகள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று எனது விசாரணையில் தெரியவந்ததாலும் மற்று எதரிகளை நீக்கம்செய்து பாண்டியராஜன் மீது மட்டும் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எனது விசாரணையில் 161(3) குவிமுச விசாரணையில் சொல்லியுள்ள விபரத்தை சொல்லியுள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

காவல் ஆய்வாளரும் காவல் துணை கண்காணிப்பாளர் சுகுமாறனும் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும் பார்வை மகசர் மாதிரி வரைபடம் மற்றும் வழக்காவணங்கள்அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார்செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நாள், சொன் நேரம், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும் சரியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**
**இல்லை**